**1**

**கூடுதல் மாவட்ட அமர்வு நீதிமன்றம் மற்றும் மோட்டார் வாகன தீர்ப்பாயம், பெரியகுளம்.**

ம.சா. 2 நாள்: 24.10.2025

வழக்கு எண் **MCOP No. 42/2022**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : பாலமுருகன் | ஊர் | : தேவதானப்பட்டி |
| தந்தை பெயர் | : குழந்தைவேல் | தாலுகா | : தேனி |
| தொழில் | : சிறப்பு சார்பு ஆய்வாளர் | வயது | : 59/2025 |

ஆணையுறுதி சட்டப்படி, சாட்சி பிரமாணம் செய்யப்பட்டார். 1908 ம் ஆண்டு, சிவில் நடைமுறைச் சட்டம் பிரிவு கட்டளை XVIII விதி 4 ன்கீழ், சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.

**மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சியின் முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் மனுதாரர் தரப்பில் 2 வது சாட்சி ஆவேன். தேவதானப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை சார்பு செய்யப்பட்டதன் அடிப்படையில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

நான் காவல் நிலையத்தில் 6 மாதங்களாக வேலை செய்து வருகிறேன். தேவதானப்பட்டி காவல் நிலைய குற்ற எண்.611/2021 என்பது சோலைராஜ் என்பவர் மீது பதிவு செய்யப்பட்ட வழக்கு ஆகும். அது மோட்டார் வாகன விபத்து வழக்கு ஆகும். மேற்படி விபத்தில் இறந்த நபரின் பெயர் அய்யல்ராஜ் ஆவார். ம.சா.ஆ. 1 ஆவணம் எங்கள் காவல் நிலையத்தில் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை தான். மேறப்டி விபத்தில் இறந்து போன அய்யல் ராஜ் என்பவரை பிரேத பரிசோதனைக்கு அனுப்பினோம். என்னிடம்காட்டப்படுவது அய்யல்ராஜ் என்பவருக்கு வழங்கப்பட்ட பிரேத

2

பரிசோதனை அறிக்கை ஆகும். மேற்படி பிரேத பரிசோதனை அறிக்கையின் உண்மை நகல் **ம.சா.ஆ. 12** ஆகும். மேற்படி விபத்து சம்பந்தமான குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தின் எண். TN 60 T 4605 xylo car ஆகும்.

**3 ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் இனம் தெரியாத வாகனம் மோதி விபத்து ஏற்பட்டதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் விபத்து சம்பந்தப்பட்ட வழக்கின் குற்ற இறுதி அறிக்கை நகலை இந்நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை.

**1, 2 எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1, 2 எதிர்மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் ஆகாததால் 1,2 எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணையை இந்நீதிமன்றம் தன்னிட்சையாக முடித்து வைக்கிறது.)

சாட்சியால் சொல்லப்பட்ட விவரங்களை, அப்படியே, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு,தட்டச்சரால், கணினி உதவியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்ட, சாட்சி, பதிவு செய்யப்பட்ட விவரத்தை, ஒப்புக் கொண்டு, என் முன்னிலையில் கையொப்பமிட்டார் என்று உறுதி அளிக்கிறேன்.

**(Sd/- C. Sankar)**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,**
**கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம்,**
**பெரியகுளம்.**